# மசோதா ஒப்புதல் தாமதம்: பஞ்சாப் ஆளுநருக்கு உத்தரவு

**புது தில்லி, நவ. 6:** 'மாநில சட்டப் பேரவைகள் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும்' என்று கூறிய உச்சநீதிமன்றம், இந்த விவகாரத்தில் பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் இதுவரை எடுத்த நடவடிக்கைகளை அறிக்கையாகத் தாக்கல் செய்ய திங்கள்கிழமை உத்தரவிட்டது.

மசோதாக்களுக்கு அனுமதி அளிப்பதில் பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தாமதிப்பதாக மாநிலத்தில் ஆளும் ஆம் ஆத்மி அரசு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றம் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தது.

இதேபோன்ற மனுவை தமிழக, கேரள ஆளுநர்களுக்கு எதிராக அந்தந்த மாநில அரசுகளும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளன.

**ஆளுநர்களுக்கு அதிகாரம் இல்லை:** பஞ்சாப் அரசு தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதி ஜே.பி. பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

பஞ்சாப் அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் அபிஷேக் சிங்வி, 'நிதி மேலாண்மை, கல்வி உள்ளிட்ட 7 மசோதாக்கள் கடந்த ஜூலையில் ஆளுநரின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. அவை அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளதால் பஞ்சாப் அரசின் நிர்வாகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அருணாசல பிரதேச அரசு தொடர்பான நபம் ரெபியா வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 'ஆளுநர்கள் மசோதாக்களை கிடப்பில் போட அதிகாரம் இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டார்.

**ஆளுநர் தரப்பில் எதிர்ப்பு:** பஞ்சாப் ஆளுநர் தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'மசோதாக்கள் மீது ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். பஞ்சாப் அரசு தொடுத்துள்ள இந்த வழக்கு தேவையற்றது' என்றார்.

**முடிவுக்கு வர வேண்டும்:** இரு தரப்பு வாதங்களைக் கேட்ட தலைமை நீதிபதி அமர்வு, 'உச்சநீதிமன்றத்துக்கு இந்த விவகாரம் வருவதற்கு முன்பு மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்திருக்க வேண்டும். இதுபோன்ற பிரச்னைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளதாக சொலிசிட்டர் ஜெனரல் கூறுவதால், இது தொடர்பான கூடுதல் தகவல்கள் அடங்கிய அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு மீண்டும் வெள்ளிக்கிழமை (நவ. 10) விசாரிக்கப்படும். அப்போது ஆளுநரின் அறிக்கையின் தகவல்கள் மதிப்பிடப்படும்' என்றது.

**தொடரும் மோதல்:** பஞ்சாபில் ஆளும் ஆம் ஆத்மி அரசின் முதல்வர் பகவந்த் மான், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் இடையே தொடர் அதிகார மோதல் நிலவி வருகிறது. பேரவையில் தாக்கல் செய்ய அனுமதி கோரி கடந்த நவ. 1-ஆம் தேதி அனுப்பப்பட்ட 3 மசோதாக்களில் இரண்டுக்கு மட்டும் ஆளுநர் அனுமதி அளித்தார்.

பஞ்சாப் அரசு கொண்டுவந்த மூன்று பண மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படாது என முதல்வருக்கு ஆளுநர் கடிதம் எழுதினார். மேலும், பட்ஜெட் கூட்டத்தொடரை நீட்டித்து நடத்தப்பட்ட மழைக்கால கூட்டத் தொடர் சட்டவிரோதம் என்பதால், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் செல்லாது என்று குறிப்பிட்டிருந்தார். இதனால் பேரவை கூட்டத்தொடரை அரசு பாதியில் நிறுத்தியது.

ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் பஞ்சாப் அரசு முறையிட்டுள்ளது.

மேலும், அமைச்சரவையில் முடிவுக்கு ஏற்ப பட்ஜெட் கூட்டத் தொடரை கூட்ட ஆளுநர் அனுமதி அளிக்க மறுப்பதாகக் கூறி, கடந்த மார்ச் மாதம் பஞ்சாப் அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது குறிப்பிடத்தக்கது.



- இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு வருவதற்கு முன்பு மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்திருக்க வேண்டும்.
- மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளதாக சொலிசிட்டர் ஜெனரல் கூறுவதால், இது தொடர்பான கூடுதல் தகவல்கள் அடங்கிய அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும்.

—உச்சநீதிமன்ற அமர்வு



பன்வாரிலால் புரோஹித்



பகவந்த் மான்

## மாநில அரசுக்கு கண்டிப்பு

பஞ்சாப் ஆளுநருக்கு எதிரான வழக்கின் விசாரணையின்போது சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'கடந்த ஆண்டு மார்ச் 22-ஆம் தேதி பட்ஜெட் கூட்டத்தொடரை முடிக்காமல் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்த பிறகு, அதை முடித்து வைக்கும் நடைமுறையை பஞ்சாப் அரசு கடைப்பிடிக்கவில்லை; தொடர்ந்து, ஜூன் மாதம் மழைக்கால கூட்டத் தொடரை பஞ்சாப் அரசு அப்படியே கூட்டியது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது' என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், 'ஆறு மாதங்களுக்கு ஒருமுறையாவது பேரவை கூட்டத்தொடரை மாநில அரசு சட்டப்படி கூட்ட வேண்டும். ஆனால், பட்ஜெட் கூட்டத்தொடரை மழைக்கால கூட்டத்தொடருடன் மாநில அரசு இணைத்தது அரசியலமைப்புச் சட்டத்தில் இல்லாத ஒன்று. இப்படிச் செய்துவிட்டு பட்ஜெட் கூட்டத்தொடரை கூட்ட ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தை மாநில அரசுகள் நாடுவது ஏன்?.

முதல்வர் மற்றும் ஆளுநர் சற்று மனசாட்சியுடன் நடந்துகொள்ள வேண்டும். ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லர். மசோதாக்களுக்கு அனுமதி அளிக்காமல் வைத்திருப்பதற்குப் பதிலாக மாநில அரசுகளுக்கு ஒருமுறை திருப்பி அனுப்பலாம்.

அரசியலமைப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டதுமுதல் இந்தியா ஜனநாயக நாடாக உள்ளது. இதுபோன்ற விவகாரங்களை ஆளுநரும், மாநில அரசும் தீர்த்துக்கொள்ள வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தை நிலைநாட்ட நீதிமன்றங்கள் உள்ளன' என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

## தமிழக ஆளுநருக்கு எதிரான மனு நவ. 10-இல் விசாரணை

நமது நிருபர்

**புது தில்லி, நவ. 6:** தமிழக ஆளுநருக்கு எதிராக மாநில அரசு தாக்கல் செய்த மனு நவ. 10-ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.

'மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதாமதப்படுத்தும் ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாடுகளை சட்டவிரோதம்' என அறிவிக்க உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் கடந்த அக். 31-ஆம் தேதி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்றத்தின் முன்கூட்டிய வழக்குகள் பட்டியலில் நவ. 10-ஆம் தேதி விசாரணைக்கு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன் தமிழக அரசின் தரப்பில் வழக்குரைஞர் சபரிஷ் சுப்ரமணியனுடன் மூத்த வழக்குரைஞர் பி.வில்சன் திங்கள்கிழமை ஆஜராகி, நவம்பர் 10-ஆம் தேதி பட்டியலில் உள்ள தமிழக அரசின் ரிட் மனுவுடன், துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பாக ஆளுநர் வெளியிட்ட 3 அறிவிக்கைகளுக்கு இடைக்கால தடை விதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையையும் பட்டியலிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# யெகோவாதான் காப்பாற்ற வேண்டும்!

கேரள மாநிலம் கொச்சி அருகே ஒரு வாரம் முன்பு கிறிஸ்தவ பிரார்த்தனைக் கூட்டத்தில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்த நிகழ்வு தேசிய அளவில் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே கேரள மாநிலத்தைச் சேர்ந்த பலர் ஐஎஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருக்கும் நிலையில், சமீபத்திய நிகழ்வு பாதுகாப்பு அமைப்புகளை நிமிர்ந்து உட்கார வைத்திருக்கிறது.

கொச்சி அருகேயுள்ள தொழிற்சாலை நகரமான களமசேரியில் உள்ள ஜாம்ரா சர்வதேச மாநாட்டு அரங்கில் 'யெகோவாவின் சாட்சிகள்' எனும் மதப் பிரிவு மூன்று நாள் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தியது. இறுதி நாளில் பெண்கள், குழந்தைகள் என ஏராளமானோர் கூடியிருந்த நிலையில், அங்கே அடுத்தடுத்து மூன்று குண்டுகள் வெடித்தன. நான்கு பேர் உயிரிழந்தனர் என்றால், 60–க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

கிறிஸ்தவ பிரார்த்தனைக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு என்கிற செய்தி வெளியானவுடன் அதை இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளுடன் தொடர்புபடுத்தி சமூக ஊடகங்களில் பரவலாக விமர்சனங்கள் பதிவாகின. ஆனால், 'யெகோவாவின் சாட்சிகள்' அமைப்பைச் சேர்ந்த டொமினிக் மார்ட்டின் என்பவர் தனது முகநூல் பக்கத்தில் குண்டு வெடிப்புக்கு பொறுப்பேற்றதுடன், காவல் துறையிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து பரபரப்பு சற்று அடங்கியது.

'யெகோவாவின் சாட்சிகள்' நல்ல அமைப்பு இல்லை என்றும், அதன் போதனைகள் தேசத்துரோகமானவை என்றும் குற்றம்சாட்டிய மார்ட்டின், அந்த அமைப்பின் போதனைகள் திருத்தப்பட வேண்டும் என்று, தான் வலியுறுத்தியதாகத் தெரிவித்திருக்கிறார். யாரும் எதிர்வினையாற்றாவிட்டால் அந்த அமைப்பின் வழிமுறைகள் திருத்தப்படாது என்பதால், இப்படியொரு முடிவை எடுத்ததாகவும், தனது வாக்குமூலத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

களமசேரியில் 'யெகோவாவின் சாட்சிகள்' கிறிஸ்தவ பிரார்த்தனைக் கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்புக்கு ஒருநாள் முன்பாக முஸ்லிம் அமைப்பு ஒன்று இஸ்ரேலுக்கு எதிரான கண்டனக் கூட்டமொன்றை மலப்புரத்தில் நடத்தியது. அந்தக் கூட்டத்தில் 'ஹமாஸ்' பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த தலைவர்கள் சிலர் காணொலி மூலம் உரையாற்றியது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. களமசேரி குண்டு வெடிப்பும், ஹமாஸ் பயங்கரவாத அமைப்புடனான தொடர்பும் கேரள மாநிலத்தை கலவர எரிமலைக் களமாக மாற்றிவிடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

டொமினிக் மார்ட்டின் வளைகுடா நாடுகளில் முன்பு பணியாற்றியவர். வெடிகுண்டு தயாரிக்கும் முறையை இணையதளத்தின் மூலம் கற்றுக்கொண்டதாகத் தெரிவித்திருக்கிறார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த பலர் பல்வேறு மேற்கு ஆசிய நாடுகளில் பணிபுரிவதால், அங்குள்ள பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பில் இருப்பதற்கான வாய்ப்பு அதிகம். அதனால், சர்வதேச அரசியல் நிகழ்வுகள் கேரள மாநிலத்தில் அழுத்தமாகவும், ஆழமாகவும் பிரதிபலிப்பதைத் தவிர்க்க முடியாது.

பகைத்த தவறாக முடியாது.

1870–ஆம் ஆண்டு அமெரிக்காவில் வேதாகம அமைப்பு ஒன்று உருவானது. தீவிர வேதாகம வாசிப்புக்கும், ஆய்வுக்கும் பிறகு அவர்கள் கிறிஸ்தவ மதத்தின் பிதா – சுதன் – பரிசுத்த ஆவி என்கிற ஹிந்து மதத்தைப் போன்ற 'மும்மூர்த்திகள்' நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. யூதர்களைப் போல யெகோவாவை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் அந்த அமைப்பு, தங்களை 'யெகோவாவின் சாட்சிகள்' (யெகோவா விட்னஸஸ்) என்று அழைத்துக் கொண்டனர்.

'யெகோவாவின் சாட்சிகள்' அமைப்பைச் சேர்ந்தவர்கள், உலகம் பாவத்தில் மூழ்கிக் கிடக்கிறது என்றும், தங்களைப் பின்பற்றுவர்களுக்கு மட்டுமே இதிலிருந்து விமோசனம் கிடைக்கும் என்றும் கருதுகிறார்கள். எந்தவொரு நாட்டையும் அவர்கள் அங்கீகரிப்பதில்லை. எந்த நாட்டு ராணுவத்திலும் இணைந்து பணியாற்றமாட்டார்கள். எந்த நாட்டு தேசிய கீதத்தையும் பாடமாட்டார்கள்.

இந்த பிரச்னை சில ஆண்டுகளுக்கு முன்பு கேரளத்தில் எழுந்தது. 'யெகோவாவின் சாட்சிகள்' பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் தேசிய கீதம் பாட மறுத்ததால் பள்ளியிலிருந்து அகற்றப்பட்டனர். அவர்கள் உச்சநீதிமன்றம் வரை சென்று அது தங்களது அடிப்படை உரிமையை பாதிக்கிறது என்று வாதாடினார்கள். உச்சநீதிமன்ற நீதிபதி ஓ. சின்னப்ப ரெட்டி, 'நமது கலாசாரம், தத்துவம், அரசமைப்புச் சட்டம் எல்லாமே சகிப்புத்தன்மையைப் போதிக்கிறது. அதை நீர்த்துப்போக நாம் அனுமதிக்கக் கூடாது. தேசிய கீதம் இசைப்பதும், இசைக்க மறுப்பதும் ஒருவருடைய அடிப்படை உரிமை' என்று கூறி மாணவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கினார். அதே நேரத்தில், தேசிய கீதம் இசைக்கப்படும்போது எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கேரள மாநிலத்தின் சில தொகுதிகளில் ஹிந்துக்கள் சிறுபான்மையினராக இருக்கிறார்கள் என்பது பலரையும் வியப்பில் ஆழ்த்தும். மொத்த மக்கள்தொகையில் முஸ்லிம்கள் 27%, கிறிஸ்தவர்கள் 18% இருந்தாலும்கூட, பல பகுதிகளில் அவர்கள் அதிக எண்ணிக்கை கொண்ட வாக்காளர்களாகத் திகழ்கிறார்கள். சமீபகாலம் வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயகக் கூட்டணியை ஆதரித்து வந்த முஸ்லிம் வாக்காளர்கள் பலர் எஸ்டிபிஐ, தடை செய்யப்பட்ட பாப்புலர் ஃபிரண்ட் ஆஃப் இந்தியா அமைப்புகளின் ஆதரவாளர்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களது வாக்குகளைக் கவர மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் முனைப்பு காட்டுகிறது.

மதம், மார்க்ஸியம், அரசியல் மூன்றுடன் பயங்கரவாதமும் இணையத் தொடங்கியிருப்பது, கேரளத்தில் வெடிக்க இருக்கும் பூகம்பத்தின் அறிகுறி!

# சாலை விதிகளை மதிப்போம்

**பாறப்புறத் இராதாகிருஷ்ணன்**

கடந்த ஆகஸ்ட் மாதம் செங்கல்பட்டு மாவட்டம், பொத்தேரியில் தனியார் கல்லூரி அருகே, பொதுமக்கள் சாலையைக் கடக்க காத்திருந்தபோது, அதிவேகத்தில் வந்த லாரி ஒன்று திடீரென கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் ஆறு பேர் உயிரிழந்தனர். இதே போன்று செப்டம்பர் மாதம் திருப்பத்தூர் மாவட்டம் நாட்டறம்பள்ளி அருகே நடந்த சாலை விபத்தில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த எட்டு பெண்கள் உயிரிழந்தனர்.

கடந்த மாதம், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் பகுதியில் நடந்த சாலை விபத்தில் காரும், லாரியும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் உள்பட ஏழு பேர் உயிரிழந்தனர்.

இவை தவிர, நீலகிரி மாவட்டம், குன்னூர் மலைப் பாதையில் ஏற்பட்ட சாலை விபத்தில், தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து சுற்றுலா சென்ற ஒன்பது பேர் உயிரிழந்ததுடன் பலர் பலத்த காயமடைந்தனர். இவ்வாறு சாலை விபத்துகளால் கொத்து கொத்தாக மக்கள் உயிரிழக்கின்றனர்.

வாகனப் பெருக்கம், சாலைகளில் நெரிசல், பராமரிக்கப்படாத சாலைகள், மற்றவர்களைப் பற்றி கவலைப்படாத ஓட்டுநரின் மனோபாவம், சாலை விதிகளை மீறுதல், குறுகலான பாதைகளிலும், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பாதைகளிலும் வாகனங்களை அதிவேகமாக இயக்குவது போன்றவை சாலை விபத்துகளுக்கு முக்கியக் காரணங்களாகும்.

மேலும், உரிய உரிமம் இல்லாமல் சிறுவர்கள் வாகனங்களை இயக்குவது, பழுதடைந்த வாகனங்களை ஓட்டுவது, தொடர்ந்து ஓட்டுவதால் தூக்கமின்மை, பதற்றம், மது அருந்தி விட்டு வாகனங்களை ஓட்டுவது, கைப்பேசியில் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுவது, நடைபாதை ஆக்கிரமிப்பு போன்றவையும் சாலை விபத்துகளுக்கான வேறு பல காரணங்களாகும்.

உலக வாகனங்களின் எண்ணிக்கையில் வெறும் ஒரு சதவீதம் மட்டுமே கொண்டிருக்கும் இந்தியா, சர்வதேச அளவிலான சாலை விபத்துகளில் 10 சதவீதமாக இருக்கிறது. நம் நாட்டில் ஒரு மணி நேரத்திற்கு சராசரியாக 53 சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. கடந்த ஆண்டு நாடு முழுவதும் 4,61,312 சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளன. இதில் 1,68,491 பேர் உயிரிழந்தனர். 4,36,366 பேர் காயமடைந்துள்ளனர்.

நாட்டிலேயே அதிக சாலை விபத்துகள் நிகழ்ந்த மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் 64,105 சாலை விபத்துகள் பதிவாகி உள்ளன. உயிரிழப்புகளில் உத்தர பிரதேசம் முதலிடத்திலும், அடுத்தபடியாக தமிழ்நாடும் உள்ளன.

2021-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நம் நாட்டில் விபத்துகளின் எண்ணிக்கை 11.9 சதவீதமும், உயிரிழப்பு 9.4 சதவீதமும், காயமடைவது 15.3 சதவீதமும் அதிகரித்துள்ளது. மேலும், இருசக்கர வாகனங்கள் மூலம் ஏற்படும் சாலை விபத்துகளும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் இரண்டாம் ஆண்டாக அதிகரித்திருப்பது கவலையளிப்பதாக உள்ளது.

சாலை மேம்பாடு எந்த அளவுக்கு முனைப்புடன் முன்னெடுக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு சாலைப் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறவில்லை என்பதை நாம் உணர்ந்தாக வேண்டிய கட்டாயத்திலுள்ளோம். நம் நாட்டில் அனைத்து பெருநகரம், சிறுநகரங்களும் மனிதர்கள் பாதுகாப்பாக நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

மழைநீர் வடிகால், புதை சாக்கடை, மெட்ரோ ரெயில், மேம்பாலம், தொலைபேசி கோபுரம் அமைத்தல் என்று ஏதாவது ஒரு காரணத்துக்காக ஆங்காங்கே சாலைகள் தோண்டப்பட்டும், சிதைக்கப்பட்டும், செப்பனிடப்படாமலும் இருப்பதால் பொதுமக்கள் அடைந்து வரும் துன்பங்கள் சொல்லி மாளாது.

இதோடு சாலைகளில் இருபுறமும் மனிதர்களும், கால்நடைகளும் எளிதில் செல்ல முடியாமல் நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதனால், தெருக்களில் பசியோடு அலைந்துகொண்டிருக்கும் பசு மாடுகளும், எருமை மாடுகளும், சாலையோரக் கடைகளில் இருக்கும் கீரைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை உண்பதற்காக சாலையைக் கடந்து விபத்துகளை ஏற்படுத்துகின்றன. தடுக்க வருபவர்களை அக்கால்நடைகள் முட்டி மேலும் விபத்துகளை ஏற்படுத்துகின்றன.

சாலை விபத்துகளுக்கு வாகனங்களின் குறைபாடுகள்தான் காரணம் என்பதை இன்று யாரும் ஏற்றுக் கொள்வதில்லை. காரணம், இன்று எல்லா பாதுகாப்பு அம்சங்களும் நிறைந்த, வாகன ஓட்டிகளுக்கு எந்தவிதமான விபத்தையும் ஏற்படுத்தாத அதிநவீன வசதிகளுடன் கூடிய வாகனங்கள் வந்துவிட்டன.

ஆனால், குறுகலான சாலைகள், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகள், பேருந்து நிறுத்தங்களின் அருகே என எல்லா இடங்களிலும், பொதுமக்கள் இருபுறமும் நடக்க முடியாத அளவிற்கு நடைபாதைக் கடைகள் ஆக்கிரமித்துள்ளன. இவைதான் பெரும்பாலான சாலை விபத்துகளுக்கு காரணம் என்று பலரும் கூறுகின்றனர்.

அதே சமயம், வாகன ஓட்டிகளின் கவனக் குறைவும், போதுமான பயிற்சியின்மையும், சிறுவர்களை வாகனங்கள் ஓட்ட பெற்றோர் அனுமதிப்பதும், வாகன ஓட்டிகள் சாலை விதிகளைக் கடைப்பிடிக்காமையும் கூட சாலை விபத்து ஏற்படுவதற்கு முக்கியக் காரணங்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பிறவிகளிலேயே கிடைத்தற்கரிய பிறவி மனிதப் பிறவி தான். அது இப்புவியை மெருகு குறையாமல், மேலும் பல வண்ணமயமாக்கும் சக்தி படைத்தது. நாளைய உலகை ஆளப் போகும் ஆற்றலும் திறனும் கொண்டது. எனவேதான், 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவை மூதாட்டி. 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்றார் அப்பரடிகள்.

எனவே, கிடைத்தற்கரிய இம்மானிடப் பிறவியை இழக்காமலிருக்க, சாலை விதிகளைக் கடைப்பிடிப்போம்; நடைபாதைகளை ஆக்கிரமிக்காமல் இருப்போம்; சாலை விபத்தில்லா தமிழகத்தை உருவாக்குவோம்; விலை மதிப்பு மிக்க மனித உயிர்களைக் காப்போம்.

EVA STALIN

# ஜிகா வைரஸ் பரவல்: மக்கள் விழிப்புடன் இருக்க கேரள அரசு அறிவுறுத்தல்

**திருவனந்தபுரம், நவ.6:** கேரளத்தின் வடக்கு கண்ணூர் மாவட்டத்தில் ஜிகா தீநுண்மி பாதிப்பு பரவிய நிலையில், கொசுக்கள் மூலமாகப் பரவும் இந்த பாதிப்பு குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொதுமக்களுக்கு மாநில சுகாதாரத் துறை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

காய்ச்சல், தலை வலி, உடல் வலி, மூட்டு வலி, கண்கள் சிவத்தல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சுகாதாரப் பணியாளர்களிடம் மக்கள் தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும் சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

கண்ணூர் மாவட்டம் தலசேரி பகுதியில் கடந்த அக்டோபர் 30-ஆம் தேதி ஜிகா தீநுண்மியால் பாதிக்கப்பட்ட முதல் நபர் கண்டறியப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் நவம்பர் 1-ஆம் தேதி மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டன.

அதில், 8 பேருக்கு ஜிகா தீநுண்மி பாதிப்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு முடுக்கிவிட்டுள்ளது. மருத்துவமனைகளுக்கும் அறிவுறுத்தல்களை மாநில அரசு வழங்கியுள்ளது.


வீணா ஜார்ஜ்

இதுதொடர்பாக மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தலைமையில் தலசேரியில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்பட்ட அறிவுறுத்தலில் கூறியிருப்பதாவது:

காய்ச்சல், தலை வலி, உடல் வலி, மூட்டு வலி, கண்கள் சிவத்தல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சுகாதாரப் பணியாளர்களிடம் மக்கள் தகவல் தெரிவிக்க வேண்டும்.

இந்த அறிகுறிகள் தென்படும் நோயாளிகளுக்கு மருத்துவமனைகள் சிறப்புக் கவனம் செலுத்தி சிகிச்சை அளிக்க வேண்டும்.

இந்த தீநுண்மியால் கர்ப்பிணிகள் பாதிக்கப்படும்போது, கருவில் இருக்கும் குழந்தைக்கு பிறவிக் குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, காய்ச்சல் பாதிப்புள்ள கர்ப்பிணிகள் மீது மருத்துவர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த தீநுண்மி 'ஏடிஸ்' கொசுக்கள் மூலமே பெரும்பாலும் பரவுகிறது என்றபோதும், ரத்த தானம் மற்றும் பாலியல் உறவு மூலமாகவும் பரவ வாய்ப்புள்ளது.

எனவே, மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். கொசு இனப்பெருக்கத்தை தடுக்கும் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைஷாலி, விதித் குஜராத்திக்கு பட்டம்

## கேண்டிடேட்ஸ் போட்டிக்கும் தகுதி




**ஐல் ஆஃப் மான், நவ. 6:** பிரிட்டனில் நடைபெற்ற ஃபிடே கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்.வைஷாலி, விதித் குஜராத்தி ஆகியோர் முறையே மகளிர் மற்றும் ஓபன் பிரிவுகளில் பட்டம் வென்றனர்.

கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டியில் சாம்பியனாகிய முதல் இந்தியர் என்ற பெருமையை வைஷாலி பெற்றார். இப்போட்டியில் அவருக்குப் பிறகு விதித் வென்றார். பட்டம் வென்ற விதித் குஜராத்திக்கு கோப்பையுடன் ரூ.66 லட்சமும், தமிழகத்தின் வைஷாலிக்கும் கோப்பையுடன் ரூ.20 லட்சமும் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டன.

முன்னதாக, மகளிர் பிரிவு கடைசி சுற்றில் வைஷாலி - மங்கோலியாவின் பத்குயாக் முங்குந்துலுடன் டிரா செய்தார். இதையடுத்து அவர் 8.5 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார். இதர இந்தியர்களில் திவ்யா தேஷ்முக், டி.ஹரிகா ஆகியோர் தலா 6 புள்ளிகளுடன் முறையே 17, 18-ஆவது இடத்தைப் பிடித்தனர். தானியா சச்தேவ் (26/5.5), வந்திகா அகர்வால் (31/5.5), சவிதா ஸ்ரீ (39/4.5) ஆகியோரும் போட்டியை நிறைவு செய்தனர்.

ஓபன் பிரிவு கடைசி சுற்றில் விதித் குஜராத்தி - செர்பியாவின் அலெக்ஸாண்டர் பிரெட்கேவை வீழ்த்தி, 8.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் நிறைவு செய்தார். தோல்வியே சந்திக்காத அர்ஜுன் எரிகைசி (4/7.5), ஆர்.பிரக்ஞானந்தா (13/7), அரவிந்த் சிதம்பரம் (30/6), எஸ்.எல்.நாராயணன் (32/6), நிஹால் சரின் (45/6), 50 இடங்களுக்குள்ளாக வர, ரௌனக் சத்வனி, பி.ஹரிகிருஷ்ணா, டி.குகேஷ், ஆரியன் சோப்ரா, அதிபன், அபிஜித் குப்தா, முரளி கார்த்திகேயன் ஆகியோர் முற்றிலும் பின்னடைவை சந்தித்தனர்.

**தகுதி:** கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டியில் பட்டம் வென்றதன் மூலம், அடுத்த ஆண்டு ஏப்ரலில் கனடாவில் நடைபெறவுள்ள கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கும் வைஷாலி, விதித் தகுதிபெற்றனர். அதில் வெல்பவர், உலக சாம்பியன் பட்டத்துக்காக நடப்பு சாம்பியனுடன் மோதும் வாய்ப்பை பெறுவர்.

இதனிடையே, இப்போட்டியின் மூலம் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தையும் நெருங்கிய வைஷாலி, அந்த அந்தஸ்துக்காக இன்னும் சில புள்ளிகள் சேர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.